RECEIVED
PERIODICALS DIVISION
LIBRARY

# எம். ஆர். ராதா காலமானார்!

(திருச்சி)

நடிகவேள் எம். ஆர். ராதா, தமது எழுபத்தொராவது வயதில், நேற்று அதிகாலை இங்குள்ள ஒரு தனியார் மருத்துவமனையில்காலமானார்,

கடந்தவாரம், மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு நடிகர் ராதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்று, வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நாடக' திரைப்பட நடிகரான திரு. எம். ஆர் ராதா,

[6ம் பக்கம் பார்க்க]

மானிப்பாய் மாணவர்களுக்கோர்
அரிய சந்தர்ப்பம்
பலரின் வேண்டுகோளிற்கமைய
லோகநாதன்
இன்ஸ்ரிரியூட் [கிளை]
மானிப்பாய் வீதி-மானிப்பாய்
(இந்துமகளிர் கல்லூரிக்கு அருகாமையில)
ஆரம்பம் - 19-9-79

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

the EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 புரட்டாசி 2 ஷவ்வா 25 இதழ் 218
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18-9-79

# நாட்டு மக்களின் பிரச்னைகளை ஜனாதிபதி தீர்த்துவைப்பார்!

## பிறந்ததின விழாவில்

### அமைச்சர் 'பெஸ்டஸ்' நம்பிக்கை

(நமது நிருபர் சு. தர்மலிங்கம்)

"இந்தநாட்டில் வாழும் மக்களின் சகல பிரச்னைகளையும் கௌரவமான முறையில் தீர்த்துவைக்க ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன விருப்பம்கொண்டுள்ளார். இந்நாட்டில் வதியும் பல இன மக்களின் பல்வேறு பிரச்னைகளையும் ஜனாதிபதி, சுமுகமான முறையில், மனிதாபிமானத்தோடு தீர்த்துவைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்"

யாழ் முஸ்லிம் வீதியிலுள்ள ஜின்னா பள்ளியில் நடைபெற்ற ஜனாதிபதியின் 74வது பிறந்ததினவிழாவை முன்னிட்டுவிசேடதொழுகையில்பங்குபற்றி உரையாற்றுகையில் கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வைபவத்தில் ஒஸ்மானியாக் கல்லூரி மாணவ மாணவிகளும் முஸ்லிம் பெண்களும் பெருந்தொகையாகக் கலந்துகொண்டனர்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. இரண்டாவது உலகயுத்தத்தின்போது சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்து எமது நாட்டையே படுநாசமாக்கிய ஜப்பானையே மன்னித்து அவர்களிடம் எந்தவித உதவியையும் நாடாது அவர்களைப் பற்றி அவர்களுடைய நாட்டிலேயே புகழ்ந்துரைத்தவர் நமது ஜனாதிபதி. ஜனாதிபதியின் உரையை செவிமடுத்த அமெரிக்கர் கூட, சரித்திரப் பிரசித்திவாய்ந்த உரையெனப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். ஜனாதிபதி இலங்கையில் தோன்றிய பெரியார்களுள் பெரியார் மட்டுமல்ல; சர்வதேசரீதியாக அவர் பெரும் தலைவராக மதிக்கப்படுகிறார். ஜே ஆர் ஜெயவர்த்தன இந்த நாட்டில் பிறந்ததால் இலங்கையும், இலங்கை மக்களும் பெருமையடைந்துள்ளனர், மன்னிக்கும் மனப்பான்மையைப் போதிக்கும் பௌத்த மதத்தவரான ஜனாதிபதி, எமது நாட்டிற்குப் பெரும் தீங்கை விளைவித்த ஜப்பானுடன்கூட விரோதம்கொள்ளாது நேசமனப்பான்மையுடன் நட்புறவை நாடி அந்த நாட்டிற்குச் சென்றார் என்றால் அப்படிப்பட்ட நல்ல மனம் படைத்தவர் ஏன் யாழ்ப்பாண மக்களின் பிரச்னையைத் தீர்த்துவைக்கமுடியாது? அவர் பிரச்னைகளை நிச்சயம் தீர்த்து வைப்பார் என்று கூறினார்.

[6-ம் பக்கம் பார்க்க]

## "வாடிவீட்டு கட்டட வேலைகள் வருட முடிவுக்குள் முடியும்"!

### அரசாங்க அதிபர் உறுதி

[யாழ்ப்பாணம்]

"ஊர்காவற்றுறை புதிய வாடிவீட்டுக்கான கட்டட வேலைகள் வருட முடிவுக்குள் பூர்த்தியாகும். இவ்வாடி வீட்டை அமைக்க, கடந்த ஆறு வருடங்களாக முயற்சி செய்திருந்தாலும், வேலைகள் ஏதும் ஆரம்பமாகவில்லை: ஆனால் இன்று யாழ். மாவட்ட அமைச்சு இயன்ற விதத்தில் இத்திட்டத்தை அமுலாக்கி, வேலையை ஆரம்பித்துள்ளது."

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரச அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி நேற்று நடைபெற்ற ஊர்காவற்றுறை வாடிவீட்டுக்கான அத்திவாரக்கல் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார், அத்திவாரக்கல்லை அவர் நாட்டிவைத்தபின்னர் பட்டினசபை திறந்தவெளி அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் திரு இ. சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆப்கான் அதிபர் திடீர் ராஜினமா

காபூல், செப். 17

ஆப்கானிஸ்தான் அதிபர் ஜனாப் நூர் முகமட் தாரக்கி பதவியிலிருந்து ராஜினமாச் செய்ததை அடுத்து பிரதமராக இருந்த ஜனாப் ஹபீஸ் உல்லா அமீன் புரட்சி சபைத் தலைவராகவும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் மத்தியகமிட்டியின் தலைமைக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகவீனம் காரணமாக தம்மைப் பதவியிலிருந்தும் கட்சிப் பொறுப்பிலிருந்தும் விடுவிக்குமாறு ஜனாப் தாரக்கி கேட்டுக்கொண்டதை அடுத்தே ஜனாப் அமீன் இப்பதவியை ஏற்க ஒப்புக்கொண்டார் என்று சில செய்திகளும் ஜனாப் அமீனே ஜனாப் தாரக்கியை பலவந்தமாக வெளியேற்றினார் என்று வேறு செய்திகளும் வெளிவந்துள்ளன.

கப்பல்களில் வேலை
P. M. G. Certificate RADIO OFFICERS
National Institutes பயிற்சிகளுக்கு 2-ம் பக்கம் விளம்பர இல: 3614 ஐ பார்க்கவும்
3615

## கொலை, பலாத்காரம், தற்கொலை

# மன்னாரில் பயங்கரசம்பவம்

### பொலிஸ் நாய் துணிகளைக் காட்டிக்கொடுத்தது

[மன்னார்]

மாமியார் கொலை செய்யப்பட்டு 22 வயதான மருமகள் பலாத்காரம் செய் செய்யப்பட்ட சம்பவமொன்று தலைமன்னாருக்குப் பேசாலைக்குமிடையிலுள்ள 'காங்கி' என்ற கிராமத்தில் நடந்துள்ளது.

சந்தேக நபரான இளைஞர் ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார்!

பேசாலை புகையிரத நிலையில் வசிக்கும் சின்னத்தம்பி சவரிமரியும் [வயது 42] அவரது மருமகள் திருமதி பிரான்சிஸ்ராணியும் [22வயது] 'காங்கி' என்ற இடத்தில் பனங்கொட்டை பாத்தி போட்டுவிட்டு, ரயில்பாதை வழியாக திரும்பிக்கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

வழியில் சந்தேக நபரான 26 வயது இளைஞர் மரியதாசன் பிரான்சிஸ் பர்னாந்து சவரிமேரியை நீப்பையால் அடித்து வீழ்த்தியபின்னர் ராணியை பலாத்காரம் செய்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின்பின் ராணி கிழிந்த சேலையுடனும், பலத்த காயத்துடனும் ஓடிவந்து, உறவினருக்கும், அயலவருக்கும் கூறியதாக தெரியவருகிறது.

மேசன் தொழிலாளி ஒரு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று ரயில் பாதையில் காயமடைந்து கிடந்த சவரிமேரியை தலைமன்னார் செல்லும் ரயிலை மறித்து அதில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்ததாகக் கூறப்படுகிறது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது அவர் இறந்துவிட்டார் என தெரியவந்தது.

மன்னார் பொலிசார் இச் சம்பவம்பற்றி விசாரணை நடத்தினர். ராணி, அவரது கணவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க உதவிசெய்த தவராசா ஆகியோரை விசாரணை செய்தபின் சந்தேக நபரை தேடினார்கள்.

அனுராதபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொலிஸ் நாய், பேசாலைப் பகுதியில் உள்ள காட்டில் தேடுதல் நடத்தி, சாரமொன்றையும்,

[6-ம் பக்கம் பார்க்க]

# தி. மு. க. - இ. காங். கூட்டணிக்கு எதிராக மார்க்ஸிய கம்யூ. போர்க்கொடி!

## சகல கட்சிகளையும் இணைத்து தோற்கடிக்க முயற்சி

### இந்திய கம்யூனிஸ்டும் எதிர்ப்பு

சென்னை, செப் 17 தி. மு. க. இந்திரா காங்கி எதிர்வரும் இடைக்கால ரஸ் கூட்டணியைத் தோற் தேர்தலில் தமிழ் நாட்டில் கடிக்க இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி போர்க் கொடி உயர்த்தி உள்ளது.

இக்கூட்டணியைத் தோற் கடிக்க ஜனதா கட்சி தவிர்ந்த ஏனையகட்சிகளோடு இணைந்து போராடுவது என்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாட்டுக் கிளைக் குழு கோயம்புத்தூரில் கூடித் தீர்மானித்துள்ளது.

இதே வேளையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இக் கூட்டணியை ஆதரிக்கவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுக்கிளைச் செயலாளர் திரு. பீ. மாணிக்கம் தெரிவித்துள்ளார். [இ]

## கருணாநிதி-ஜெகஜீவன் சந்திப்பு

புதுடில்லி, செப். 17 தமிழக முன்னாள் முதல்வரும் தி மு க தலைவருமான திரு. மு கருணாநிதிநேற்றுபுதுடில்லி ஜனதாகட்சித் தலைவர்களில் ஒருவரான திரு ஜெகஜீவன் ராமைச் சந்தித்துப் பேசினார் மத்திய எஃகுதுறை அமைச்சர் திரு பிஜூ பட்நாயக்கை திரு கருணாநிதி சந்தித்தார். [இ]

67 போரில் கைப்பற்றிய

## அரபு மண்ணில் இஸ்ரேல் மக்களுக்குகாணிவிற்கமுடிவு

ஜெரூஸலம், செப், 17 1967ம் ஆண்டு போரில் எகிப்திடமிருந்து கைப்பற்றிய ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரையோரப் பகுதிகளிலும், காஸா பிரதேசத்திலும் இஸ் ரேலிய பிரஜைகளுக்கு காணி களை விற்பதென இஸ்ரேலிய அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

பிரதமர் திரு பெகின் தலைமையில் நடைபெற்ற மந்திரி சபைக்கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானம் குறித்த மேலும் விபரங்கள்வெளியிடப் படவில்லை.

மேற்குறிப்பிட்ட பிரதேசங் களில் இஸ்ரேலியர்களுக்குக் காணிகளை விற்பது இதுவரை தடைசெய்யப்பட்டிருந்தது. [இ]

## அதிகாரத்தைப் பறிக்க சமயத்தலைவர்கள் முயற்சி

### ஈரான் பிரதமர் குற்றச்சாட்டு

தெஹ்ரான். செப். 17 ஈரானின் சமயத்தலைவர்கள் அரசின் அதிகாரங்களைப் பறித் தெடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

இவ்வாறு ஈரான் பிரதமர் ஜனுப் பக்தியார் குற் றம் சாட்டியுள்ளார்.

அரசின் அதிகாரங்களைப் பறித்தெடுக்கும் முன்முயற்சி யாக சமயத்தலைவர்கள் அரச மீது அடிக்கடி கண்டனம் தெரி வித்து வருகின்றனர் என்றும் இது பாடுபட்டு கட்டிஎழுப்பப் படும் பொருளாதாரத்தை விரைவிலேயே நாசம் செய்து விடுமென்றும் ஜனுப் பக்தியார் தெரிவித்துள்ளார். [இ]

## "ஈழநாடு" இந்தியத் தேர்தல் (1979) போட்டி

இவ்வருடம் டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடை பெறவிருக்கும் இந்திய பாராளுமன்ற (லோகசபை) இடைத்தேர்தலையொட்டி "ஈழநாடு" பத்திரிகை தனது வாசகர்களுக்கு இத்தேர்தல் போட்டியை நடாத்து கிறது இப்போட்டியில் கலந்துகொள்ள நீங்கள் செய்ய வேண்டியது என்ன? இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் கேட்கப்பட்டுள்ள நான்கு கேள்விகளையும் கவனமாகப் படித்து, உங்களின் ஊகத்தைக்கொண்டு விடைகளைக் கண்டுபிடித்து, "போல்பொயின்ற்" பேனாவால் தெளி வாக எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். ஒருவர் எத் தனை விடைகளையும் (கூப்பன்களையும்) அனுப்பலாம். கட்டுப்பாடு கிடையாது.

### ஈழநாடு தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டர சாங்கம்? :..................................

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ......................

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?......................

(4) புதிய பிரதமர் யார்?......................

பெயர்:..........................................

விலாசம்: ......................................

..........................................

..........................................

.......... ........................... ..................

கையொப்பம் திகதி:

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49,
யாழ்ப்பாணம்.

## இந்திரா காந்தியை அரசியல் ரீதியில் எதிர்த்துப் போரிடவேண்டும்

### தேவராஜ்அர்ஸ் கூறுகிறார்

ஹைதராபாத், செப். 17 முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை அரசியல் ரீதியில் எதிர்த்துப் போராடவேண்டும்.

இவ்வாறு காங்கிரஸ்தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ் ஹைத ராபாத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இந்திய காங்கிரஸ் இரண் டாகப் பிளவுபட்டபோது, திருமதி காந்தியுடன் பிரிந்து சென்று நீண்டநாட்களாகவே திருமதி காந்தியின் ஆதரவாள ராகஇருந்துவந்தவர் திரு.தேவ ராஜ் அர்ஸ் என்பது குறிப் பிடத்தக்கது

அண்மையிலேயே இவர் இந் திரா காங்கிரஸிலிருந்து வில கிச் சென்று காங்கிரஸில் சேர்ந்துகொண்டார்:

கடந்த வாரமே காங்கிர ஸின் தலைவர் பதவியை ஏற் றுக்கொண்டார்.

கர்நாடக மாநில காங்கிரஸ் அரசின் உறுதிப்பாட்டைக் குலைக்க இந்திரா காங்கிரஸ் பெரும் முயற்சி செய்து வருகி றது. எனினும் அம்முயற்சிகள் எதுவும் என்றுமே பலிக்கப் போவதில்லையென்றும் திரு. அர்ஸ் கூறினார்.

மாருதி விவகாரம் குறித்த அனைத்து நடவடிக்கைகளும் சட்டப்படியே நடக்கும் என் றும் திரு அர்ஸ் கூறினார் [இ]

## எம். ஜி. ஆர். அர்ஸ் சந்திப்பு

சென்னை, செப் 17 இந்திய காங்கிரஸின் புதிய தலைவர் திரு தேவராஜ் அர்ஸ்நேற்று சென்னையில் தமிழக முதல்வர் திரு எம்.ஜி இராமச்சந்திரனை இரு தடவைகள் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இன்றைய அரசியல் நிலை குறித்து இரு தலை வர்களும் பேச்சு நடத் தினார்கள் என அறிவிக் கப்பட்டது. எனினும் பேச்சுக்களின் விபரம் குறித்து இருதலைவர் களும் எதுவித தகவலை யும் வெளியிட மறுத்து விட்டனர்.

தமிழ்நாடு காங்கி ரஸ் தலைவர்களான திருமதி ரி. எம். அனந் ததாயகி, எம். பக்த வத்சலம் ஆகியோரை யும் திரு அர்ஸ் சந்தித் துப் பேசினார். (இ)

## எவரும் உரிமை கோரவில்லை

[பண்டத்தரிப்பு]

சுளிபுரம் பகுதியிலிருந்து கைவிடப்பட்ட நிலையில் பொதுமக்களால் எடுத்துவரப் பட்டு சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்ட ஏழு சைக்கிள்களுக் கும் இதுவரை உரிமை கோரி எவரும் வரவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர்

இந்த ஏழு சைக்கிள்களில் இரு சைக்கிள்கள் யாழ்ப் பாண பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்ப தாகவும், மிகுதி ஐந்து சைக் கிள்கள் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப் பதாகவும் பொலிசார் தெரி வித்தனர்

இந்த சைக்கிள்களின் உரி மையாளர்கள் தகுந்த ஆதா ரங்களை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பித்து சைக்கிள்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பொலிசார் தெரிவித் தனர். [கு]

சுதந்திரப்போராட்டம்வெற்றிபெற

## கறுப்பு இன மக்களிடையே ஐக்கியம் அவசியம்

### பிரிட்டிஷ் மாஜிமந்திரி கூறுகிறார்

லண்டன், செப். 17 தென் ஆபிரிக்க கறுப்பு இன மக்கள் தமது இனமக்களுட னேயே போராடிக் கொண்டி ருப்பதால் அவர்களுக்கு சுதந்தி ரம் கிடைத்துவிட மாட்டாது

இவ்வாறு பிரிட்டிஷ் முன் னாள் வெளிநாட்டமைச்சர் திரு. ஓவன் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க கறுப்பு இன மக்கள் முதலில் தமக்கிடையே ஒற்றுமையையும் ஐக்கியத்தை யும் பேணிப்பாதுகாக்க வேண் டும். அதற்குப் பின்னரே சுதந் சுதந்திரப்போரில் வெற்றி காணமுடியுமென்றும் திரு ஓவன் தெரிவித்தார். [இ]

## உறுப்பினர் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் வட்டாரத்தில், அவசியம் செய்யவேண்டிய வேலைகளை யாழ் மாநகரசபை உறுப்பினர்களான திரு த சவுந்தரம், திரு அ மரியாம் பிள்ளை ஆகியோர் பார்வையிட் டனர்.

இவர்களுடன் திரு எஸ் கே செபஸ்தியாம்பிள்ளை தலைமை யில் சென்ற குழுவினர் பல இடங்களுக்கும் இவர்களை அழைத்துச்சென்றனர்

இவ்வேலைகளை செய்ய முயற்சி எடுப்பதாக அவர்கள் உறுதியளித்தனர். [க]

## தமிழகத்தில் ஈ. வெ. ரா. மாவட்டம்

சென்னை, செப். 47 பெரியார் ஈ. வெ. ரா. வின் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழ கத்தில் "ஈ. வெ. ரா. மாவட்டம்" என புதிய மாவட்டம் ஒன்று உரு வாக்கப்பட்டுள்ளது

இம்மாவட்டத்தை இம்மாதம் 24ம் திகதி தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைப்பார்.

பெரியாரின் பிறந்த இடமான ஈரோட்டைத் தலைநகராகக் கொண்டு இம்மாவட்டம் அமைக் கப்பட்டுள்ளது.

இது தமிழகத்தின் 16வது மாவட்டமாகும் (இ)

## இறையியல் பட்டப் படிப்புக்காக பயணம்

[சாவகச்சேரி]

வண பிதா மேரி யோசப் அடிகளார் இறையியலில் கலா நிதி பட்டப் படிப்பிற்காக [illegible] செல்கிறார்.

# தொகுதி அபிவிருத்தி நிதியை

## உரிய முறையில் பயன்படுத்த முடியவில்லை

### உடுப்பிட்டி எம். பி. கவலை

(நெல்லியடி-உடுப்பிட்டி)
தொகுதிகளின் அபிவிருத்திக்கென ஒவ்வொரு தொகுதிக்கும் 20 லட்சம் ரூபாவை அரசாங்கம் பங்கீடு செய்து வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கி வருகின்றது. ஆனால் இந் நிதியை உரிய முறையில் பயன் படுத்தப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகள் இணைந்து செயல்படுவதன் மூலமே துரிதகதியில் தொகுதி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றலாம்.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. க. இராஜலிங்கம் நெல்லியடி மத்திய சந்தை வளவில் 7 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள நெல்லியடிப்பட்டினசபை நவீன சந்தைக்கான அடிக்கல்லை நாட்டிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நெல்லியடிப் பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. பி. எம். ஜோசேப் தலைமையில் நடைபெற்ற இவ் வடிக்கல் நாட்டு விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு க. இராஜலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பாராளுமன்ற உறுப்பினருக்கும் பொதுமக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தால்தான் தொகுதியின் அபிவிருத்தி வேலைகளில் முன்னேற்றம் ஏற்படும். பாராளுமன்ற உறுப்பினரும் பொதுமக்களின் நம்பிக்கையின் மத்தியில்தான் தொகுதி அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்.

தொகுதி அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் வளர்ந்து வரும் நாடுகளின் மத்தியில் கிராமிய பொருளாதார முன்னேற்றமே முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

கிராமிய மக்களின் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தைப்படுத்தல் இன்றியமையாதது. பொதுமக்களையும் பாவனையாளர்களையும் உற்பத்தியாளர்களுடன் இணைப்பதில் சந்தைப்படுத்தல் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. நவீன பாவனையாளர் நுகர்வோர் மத்தியில் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டால்தான் பொதுமக்கள் பயன் அடைவார்கள். சந்தைகளே இத்தகைய தொடர்பு சாதனங்களாக விளங்கி வருகின்றன.

நிலமில்லாத பற்றாக்குறையினால்தான் இந்நவீன சந்தை தற்போதுள்ள பழைய சந்தை வளவினுள் அமைந்துள்ளது. இந்நவீன சந்தை அமையும் வரை தற்காலிகமாக ஓர் இடத்தில் இச் சந்தையை நிறுவுவதற்குக் கூடிய இடம் கிடைப்பதில் பெருங்கஷ்டம் ஏற்பட்டது துரதிஷ்டமானதே.

ஒரு பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்து கட்டட வேலைகளைச் செய்யும் ஒப்பந்தக்காரர்களைப் பிடிப்பது கஷ்டமானதாகவுள்ளது. ஏனெனில் நாளுக்குநாள் விலைவாசிகள் திடீர்மாற்றமடைவதே இதற்குக் காரணமாகும். விலைவாசிகளின் திடீர் மாற்றங்களினால் ஒப்பந்தம் செய்பவர்கள் தயக்கங்காட்டி வருகின்றார்கள்.

இவ்வடிக்கல்நாட்டு விழாவில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. குணநாயகம், கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க உபதலைவர் திரு என். பாஸ்கரன், நெல்லியடிப் பட்டினசபைச் செயலாளர் திரு வ. இராமச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஏ)

## 100 ஏக்கர் நெல்வயலில் உப்புநீர் புகுந்துநாசம்

### மண்கடத்தப்படுவதே காரணமாம்

[உடுப்பிட்டி]
கப்புதூ-கிளாதூ என்னும் இடத்தில் உள்ள நூறு ஏக்கர் நெல் வயலில் உப்புநீர் புகுந்து பயிர்ச்செய்கை நாசமாகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு சட்டவிரோதமாக மண்கடத்தப்பட்டு வருவதே இந்நிலை தோன்றியுள்ளதற்குக் காரணமாகும்.

இவ்வாறு மண்கடத்தப்பட்டு வருவதால் இந்நெல் வயல்கள் பள்ளமாக்கப்பட்டு உப்புநீர் வயலினுள் புகும்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கப்புதூ பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு எஸ். குணராசா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதுசம்பந்தமாக கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. குணநாயகத்திடம் முறையிடப்பட்டுள்ளது. (ஈ)

## பஸ் இன்றி அவதி

(மன்னூர்)
மன்னூரிலிருந்து தலைமன்னாருக்குப் போதிய பஸ்சேவை இல்லாததால் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள்.

தலைமன்னாரிலிருந்து மன்னாருக்கு காலை 8 மணிக்குள் ஒன்றன்பின் ஒன்றாகப் பல வெளியூர் பஸ்கள் போகின்றன. அதேபோல் மாலை 5 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் பல வெளியூர் பஸ்கள் தலைமன்னாருக்குப் போகின்றன. காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை பஸ் சேவை மிகவும் குறைவாகவே நடைபெறுகின்றது. இதனால் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். (இ)

## துயர்துடைக்கும் துணை இறைவன் திருவடியே

### இணுவிலில் தமிழக வித்துவான்

(யாழ்ப்பாணம்)
வாழ்க்கையில் நம்மைத் துரத்தி வரும் துயரத்தின் கோரம் பிடியிலிருந்து தப்ப வேண்டுமானால் துன்பம் அணுகாத பேரானந்தப்பெருவடிவினனான இறைவன் திருவடித் தாமரைகளையே மன, மொழி, மெய் ஒன்றிச் சிக்கெனப் பற்றிக்கொள்ள வேண்டும். அதுவல்லாது வேறுதுணை நமக்கு இல்லை.

இவ்வாறு தமிழகத்தைச் சேர்ந்த அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோவில் இராஜகோபுர கும்பாபிஷேகத் திருவிழாவில் "துன்பம் துடைக்கும் தாள்" என்ற பொருள்பற்றிப் பேசுகையில் கூறினார்.

சைவப்பெரியார் திரு. கை. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் திருமதி வைத்தியநாதன் பேசுகையில் கூறியதாவது:

ஆலய விதிமுறையின் கருவூலமாக நமக்குக்காட்சி தருவது இராஜகோபுரம். இத்தகைய உயர்ந்த இராஜகோபுரம் இறைவனின் அரும் பெரும் திருவருளை சிற்பாசாரங்களாகக் காட்டிநிற்கிறது. இச்சிற்பருவங்கள் எமக்கு விளக்குவது வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளையே. சமுத்திர ஆலயங்களின் வரலாற்றுப் பெருமை மிக்க இந்த ஆலயத்திற்கு வந்து உரை நிகழ்த்தியதில் பெருமை அடைகிறேன்.

இந்த ஆலயத்தின் தொண்டுக்காக தம்மை அர்ப்பணித்த திரு. பொ. இலங்கநாதன் இந்த ஆலயத்திற்கு நிரந்தர மின்விளக்கை ஏற்றி வைத்ததுடன் எதிர்காலத்திலும் இதனைப் பராமரிக்க வங்கியில் பணம் வைப்புச் செய்துள்ளதாக அறிந்தேன். அன்னாரின் சேவையைப் பெறும் இப்பகுதி மக்கள் பாக்கியசாலிகள்.

## 'சுவாமிஞானப்பிரகாசர் நினைவுமுத்திரை வெளியிடுக

(பண்டத்தரிப்பு)
நல்லாசம் சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்தினர் பன்மொழிப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசர் நினைவாக முத்திரை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தபால் தந்தித்தொடர்புகள் அமைச்சருக்கும் கலாச்சார அமைச்சருக்கும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். இக்கோரிக்கையின் பிரதிபிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரைக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. (ச)

## சாம்பியன்

(புலோலி)
வடமராட்சி வடக்கு, இழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் துன்னாலை விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.


ராஜா
தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் சிவாஜி - பத்மினி தங்கவேலு
நடித்த
நான் வணங்கும் தெய்வம்
(புதிய பிரதி)

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30p. m only
Security expert Joe Collins is about to break his own fool-proof system in a Hamburg bank...
The Big bank heist Is on!
WARREN BEATTY, GOLDIE HAWN
in
"THE HEIST"
(color — adults)

கடைசி சில தினங்கள் மட்டும்
ஸ்ரீதர் போன் 7345 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-15, 9-45
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ-ஆதித்தன்-தங்கவேலு
நடித்த
காதல் படுத்தும்பாடு
[புத்தம் புதிய பிரதி]
ரி. ஆர். பாப்பாவின் இசை

வின்ஸர் மகத்தான 4-வது வாரம்
தினசரி 10-30, பி.ப.2-30, 6-30, 9-30
யாழ்ப்பாணம்
(தென்னிந்திய நடிகர்) (கோமாளிகள் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ் உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. வெங்கட்

SHANTHI JAFFNA PHONE 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, 9-30 p.m
M. G. M presents DEAN MARTIN in
MR. RICCO
Color - Scope
Action Packed Movie! Don't Miss This !!
Next Attraction!
THE "GOLDEN VOYAGE OF SINBAD" (Color)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
யாழ். நகர்
ஆனந்தன் — லீலா
நாகர்மலை அழகி
(புதிய பிரதி)

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாத ஜனவெள்ளத்தால் கொட்டகை நிறைந்து காட்சியளிக்கிறது.
ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா நாகேஷ் நடித்த
பட்டணத்தில் பூதம்
(புதிய பிரதி)
ஈஸ்ட்மன் கலர்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி-வாணிஸ்ரீ
குலமா குணமா

லிடோ
(யாழ் நகர்)
அன்பு எங்கே?
(புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-ஈ. வி. சரோஜா
கொடுத்து வைத்தவள்

வெஸ்லி
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நாகேஷ்-கே. ஆர். விஜயா
நாணல்

RIO (Jaffna) Daily 10-30a m. 4-45, 7-00&9-30p.m.
Phone7607 GRAND RELEASE
"An Elephant Called Slowly"
Is a Film Specially Flown. Down to celebrate the International Children's Year-Picture for Entire Family-Young and old Give Every Child a Treat and Show him the world of Animal Kingdom.
Special Schools Shows-Contact Manager

## வடபிராந்தியத்திற்கு

# தேவையான 33 பஸ்களைத் தருவிக்க தலைவர் ஏற்பாடு

### ஊழியர்கள் மத்தியில் உறுதி

(புலோலி)

"விநியாக செலவும் மக்களே எமது ஆதரவாளர்கள் எனவே அவர்களது நாளாந்த போக்குவரத்து நடவடிக்கைகளை பூர்த்தி செய்யுமுகமாக சிறந்த பஸ் சேவையை நாம் அளிக்கவேண்டும்"

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கு உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொண்ட வடபிராந்திய இ. போ. ச. தலைவர் திரு. டட்லி குணசேகரா ஊழியர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. டட்லி குணசேகரா மேலும் கூறியதாவது:

"வடபிராந்தியத்திலுள்ள சகல பஸ் டிப்போக்களிலும் நடாத்தப்படும் பஸ் சேவை களைத் திறமையாகச் செயற்படுத்த பல உடனடி நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுள்ளேன். இந்நடவடிக்கைகளைத் திறமையாகச் செயற்படுவதற்கு ஊழியர்கள் யாவரினதும் ஒத்துழைப்பு மிக அவசியமானதாகும். எனவே பொதுமக்களின் நன்மை கருதிச் சிறந்த பஸ் சேவையை வழங்குவதற்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

"வடபிராந்தியத்தைப் பொறுத்தவரையில் 33 பஸ் வண்டிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. இது பற்றி இலங்கை மத்திய இ. போ. ச. தலைவர் திரு. சந்திரமூர்த்தியின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்கிணங்க அவர் இன்னும் இரண்டு மாத காலத்தில் இப்பகுதிக்கு பஸ்வண்டிகளைத் தருவிப்பதாக உறுதியளித்துள்ளார்.


"ஊழியர்கள் அன்பாகவும், பண்பாகவும், எதுவித வேறுபாடுமின்றி சமமாக நடாத்தப்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சாலை அத்தியட்சகர்களுக்கும், பகுதித் தலைவர்களுக்கும் உத்தரவிட்டுள்ளேன். எனவே ஊழியர்களும் தமது கடமையை சிறப்பாகச் செய்யவேண்டும். ஊழியர்களுக்கு உள்ள பிரச்சினைகள், குறைபாடுகள் என்பன பற்றி அவர்களது கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் என்னுடன் நேரில் பேசிக்கொள்வதற்கு எந்த ஊழியரும் தயங்கவேண்டாம்.

"ஊழியர்களின் நன்மை கருதி புதிய சேமலாப நிதித் திட்டமொன்றினை வகுத்துள்ளேன். இதன்படி மாதாந்தம் 6 ரூபா சம்பளத்திலிருந்து கழிக்கப்படும். இதன் மூலம் ஊழியர்கள் சிறந்த நன்மையடைவார்கள். அத்துடன் மத்திய போக்குவரத்துச்சபையிடமிருந்து குறிப்பிட்ட பணத்தொகையைப் பெற்று வடபிராந்தியத்திலிருந்தே ஊழியர் சேமலாப நிதியினை வழங்கவும் திட்டமிட்டுள்ளேன். ஒவ்வொரு கிழமையும் ஊழியர்கள், பகுதித் தலைவர்கள், சாலை அத்தியட்சகர் ஆகியோரைக் கொண்ட கலந்துரையாடல்கள் நடைபெறவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் தொழிலாளர்களுக்கும் முகாமையாளருக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்படுவதனால் இரு பகுதியினரும் நன்மையடைய முடியும்"

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ சுப்பிரிண்டன் திரு. பரநிருபசிங்கம், திரு. கே. எஸ். கந்தசாமி, திரு. மகாலிங்கம், திரு. ஆர். சிவபாலன், திரு. துரைரத்தினம், திரு. குமாரசாமிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

வடபிராந்திய இ. போ. ச. சபைத் தலைவருடன் பொது முகாமையாளர் திரு. குணரத்தினபண்டாரவும் இன்னும் பல உயரதிகாரிகளும் வந்திருந்தனர். இவர்கள் இந்த டிப்போவின் சகல பகுதிகளையும் சுற்றிப் பார்வையிட்டனர். (உ-இ)

### சபிண்டீகரண அழைப்பு



## திரு. கார்த்திகேசு வைத்தியலிங்கம்

(உரிமையாளர், வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 17-7-1913 மறைவு: 20-8-1979

சித்தார்த்தி வருடம் ஆவணி மாதம் 4-ந் திகதி (20-8-79) திங்கட்கிழமை சிவபதமடைந்த

எமது அருமைத் தந்தையார்

திரு. கார்த்திகேசு வைத்தியலிங்கம்

அவர்களது அந்தியேஷ்டிக் கிரியைகள்

19-9-79 புதன்கிழமை பகல் 11 மணியளவில்

எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இவ்வைபவத்திலும்

ஆத்மசாந்தி

வழிபாடுகளிலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 3622

## வல்வை முதல்வர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை "ஈழநாடு" இதழின் முன்பக்கத்தில் வெளிவந்த "வல்வை முதல்வர் கைது" என்ற செய்தி தொடர்பாக வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் திரு. கே. ஞானமூர்த்தி பின்வருமாறு அறிவிக்கிறார்.

சனிக்கிழமை "ஈழநாடு"வில் என்னைப் பற்றி வெளிவந்த செய்தி தவறானது. காங்கேசன்துறையில் இயங்கும் வல்வை மக்கள் வங்கிக் கிளையை வல்வைக்கு மாற்றித் தருமாறு சமர்ப்பித்த வேண்டுகோளை பரிசீலனை செய்வது தொடர்பாகவே என்னை இணைப்பதிகாரி வரவழைத்தார். நல்வரவேற்பும் தந்தார். (இ)

## வாடிவீட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் கூறியதாவது:

"யாழ். குடா நாட்டின் துறைமுகமாக விளங்கிய இப்புராதன நகரமாகிய ஊர்காவற்றுறை, இன்று வசதிகள் குறைந்த நகரமாக இருக்கிறது. இக்குறையை நீக்க நாம் அயராது உழைப்போம். அரசாங்க அலுவலகங்களோடும், திணைக்களங்களோடும் மக்கள் கஷ்டமின்றி தொடர்பு கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும். ஆகவே இந்நகரத்தின் நடுமையமான இடத்தில் அலுவலகத்தை அமைக்கவும் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சை அறையும், எக்ஸ்-ரே படங்கள் எடுக்க இயந்திரமும் நிறுவி பொலிஸ் காவல் நிலையத்திற்கும் தகுதியான ஒரு கட்டிடத்தையும் அமைக்க நாம் முயற்சி செய்வோம். ஊர்காவற்றுறை, காரைநகர் பாலத்தை எங்கு நிறுவுவது என்று உங்களுடன் கலந்து ஆலோசித்து, குறிப்பிட்ட திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு, ஆவன செய்வோம்.

எமது குடியரசின் ஜனாதிபதி, ஜே. ஆர். ஜயவர்த்தனவின் பிறந்த நாளாகிய இந்நாளில், ஊர்காவற்றுறை வாடிவீட்டுக்கான அடிக்கல்லை நாட்டி, வேலைகளை ஆரம்பித்து வைத்துள்ளோம். மதிநுட்பம் நிறைந்த, ஜனாதிபதியின் தலைமையில் ஒரு புதுக்கட்டம் இலங்கைச் சரித்திரத்தில் ஆரம்பமாகிறது. இலங்கையில் வாழும் இருபெரும் இனங்கள் ஒற்றுமையாக இருப்பதற்கு அவர் எடுக்கும் முயற்சிகள் போற்றத்தக்கன. இச்சந்தர்ப்பத்தில் தமிழர்களாகிய நாம் அவர் காட்டும் ஆதரவையும், ஒத்துழைப்பையும் ஏற்று ஐக்கிய இலங்கையில் ஒவ்வொரு பிரஜையும் தன்மானத்துடனும், சுயமரியாதையுடனும் பயமும் தேவையுமின்றி வாழ முயற்சி செய்யவேண்டும்."

சட்டத்தரணி ப. கதிரவேலு, திரு இக்லைநாதன், திரு சு. கதிர்த்தம்பி ஆகியோரும் பேசினர். வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து நன்றி கூறினார். (கெ-கு)

## நாட்டு மக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### மாவட்டஅமைச்சர் பேச்சு

மாவட்ட அமைச்சர் யு. பி. விஜயக்கோன் பேசுகையில் கூறியதாவது.

"ஜனாதிபதியின் ஆட்சியில் இந்த நாடு பல வழிகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இலங்கை பூராவும் ஜனாதிபதியின் பிறந்ததின விழாக்கொண்டாட்டம் நடைபெறுகிறது. எனது தொகுதியான தம்பதெனியாவிலும் ஜனாதிபதி பிறந்ததினவிழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றபோதும் யாழ்ப்பாண மக்கள் கொண்டாடும் ஜனாதிபதியின் பிறந்ததின விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று நான் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளேன்" என்று கூறினார்.

யாழ் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் பேசுகையில் கூறியதாவது!

"பல வருடங்களாக ஒஸ்மானியாக் கல்லூரி என்று வழங்கப்பட்டுவரும் இப் பாடசாலையின் பெயர் ஒருசிலரின் முயற்சியால் "அசீஸ் மகா வித்தியாலயம்" என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. முன்னர் இருந்த பெயர்களை மாற்றி அமைப்பதால் எவ்வித பிரயோசனமுமில்லை. புதிய கட்டிடங்களைக் கட்டிப் பெரியார்களின் பெயர்களைச் சூட்டினால்தான் நாட்டுக்கும் மக்களுக்கும் பெருமை கிடைக்கும் என்றார். (கொ)

## எம். ஆர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியார் ஈ. வே. ராவின் ஒரு நேரடியான வாரிசுமாகும்! பெரியாரின் ஒரு உண்மையான சீடராக கடைசிக்காலம் வரை விளங்கிய நடிகவேள், பெரியாரின் சீர்திருத்தக் கொள்கைகளைக் கடைப்பிடித்து பின்பற்றியவராகும். உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பெரியாரின் கொள்கைகளைத் துணிச்சலாக எடுத்துரைத்தவர் நடிகவேள் ராதா என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கப்பூருக்கு நடிகவேள் விஜயஞ்செய்திருந்த போது பொதுமேடையில் வைத்து பெரியாரின் தூய பணிகளை விளக்கி, "பெரியாரின் கொள்கை ஒன்றின் மூலமாக மட்டுமே தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட முடியும்" என்று தெரிவித்திருந்தார்.

நடிகவேள் ராதாவுக்கு, தமிழக இயல் இசை நாடக மன்றம் 1962ல் "கலைமாமணி" விருது அளித்து கௌரவித்திருந்தது.

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் நேற்று மாலை விடுத்த அனுதாபச் செய்தியில், பெரியாரின் சுயமரியாதைக்கொள்கைகளை நூற்றுக்கு நூறு விதம் கடைப்பிடித்த ஒரு தொண்டன் எம் ஆர் ராதா என்று கூறினார்.

"பெரியாரின் உண்மையான ஒரு சீடராகத் திகழ்ந்தவர் ராதா; பெரியாரின் கொள்கைகளை திரையிலும், நாடகங்களிலும் பரப்பிவந்தார்" என்றும் முதல்வர் தமது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தி மு க தலைவர் கலைஞர் மு கருணாநிதி நேற்று வெளியிட்ட அனுதாபச்செய்தியில், "திரையிலும், நாடகங்களிலும் ஒரு குணசித்திரநடிகராகத் திகழ்ந்த பெரியாரின் ஒரு தூய்மையான சீடராக விளங்கினார்" என்று தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கும் அதிகமான திரைப்படங்களிலும் நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்ற நடிகவேள் எம். ஆர். ராதா, "ரத்தக் கண்ணீர்" நாடகம்,—திரைப்படம் மூலமாக திரை உலகிலேயே ஒரு சாதனையை ஏற்படுத்தினார்.

1966-ம் ஆண்டு புரட்சி நடிகர் திரு எம் ஜி ராமச்சந்திரனை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியதைத்தொடர்ந்து அவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக நடிகவேள் எம் ஆர் ராதா மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு நீதி விசாரணையின் பின்னர் எம் ஆர் ராதா சில வருடங்கள் சிறைவாசமிருந்ததும் அவர் சிங்கப்பூர் சென்றபோது இந்தியா திரும்ப அனுமதி மறுக்கப்பட்டு பின்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பன்மறிப்பையும், பாலாவடையையும் ஓரிடத்தில் காட்டிக் கொடுத்தது.

சம்பவம் நடந்த மறுதினம் மாலை சந்தேக நபரான யர்ஞாதி, மன்னாருக்கும், பேசாலைக்குமிடையில், 198-ம் மைல் கட்டைக்கு அருகில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

மன்னார் மாவட்ட மரண விசாரணை அதிகாரி திரு. ஐயஸ் மரணவிசாரணை நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் சேக்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: QB/8948/78 The Eelanadu P B No. 49, Telegram Eelanadu, T'Ph n: 889